22.01.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 169 /2009 ) திரு.ரவிச்சந்திரன்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>-

1) நான் இந்த வழக்கில் 3ம்பிரதிவாதி என்றால சரிதான். 1ம்பிரதிவாதி முருகலட்சுமி எனக்கு என்ன உறவு முறை என்றால் மனைவி ஆவார். 2ம்பிரதிவாதி கிருஷ்ணன் எனது தகப்பனார் என்றால் சரிதான். வழக்குசொத்து ஆதியில்பூச்சன் குமாரர் வேதமுத்துக்குப் பாத்தியப்பட்டியிருந்தது என்றால் சரிதான். வேதமுத்து அவரது வளர்ப்பு மகளனான இந்த வழக்கின் வாதிக்கு 27.08.1991ல் உயில் ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வேதமுத்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். வேதமுத்து எழுதிவைத்த உயில் ஆவணத்தின் அசல் தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1 என்றால் சரிதான். வேதமுத்து எப்போது இறந்தார் என்றால் 1994ல் இறந்துபோனார். பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் தபசில் விவரத்தில் இம்மாலுக்குள்கிழமேல் 15 அடி தென்வடல் 62 அடியுள்ள மனை நிலமும், அதில் கட்டியிருக்கிற பிரஷ்மட்ட சுவர்களும், தபசில் விவரம் சரி என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை 26.11.1996ல் ரூ.36,000/-த்திற்கு பதிவு செய்யப்படாத கிரையம் மூலம் வாதி எனக்கு கொடுத்தது தான் எனது கட்சி என்றால் சரிதான். பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து பி.வா.சா.ஆ.5 மூலம் பாத்தியப்பட்டது என்று கட்சிசெய்து வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது தந்தை கிருஷ்ணன் தனியாக எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது மனைவி 1ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் நகலை பி.வா.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவி தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.9ல் எதிர்வழக்குரை பாரா 4ல் மேற்படி ரவிச்சந்திரன் வாதியிடம் கேட்ட போது மேற்படி வாதி தபசில் சொத்தை பதிவு கிரையம் கொடுக்க மார்க்கமில்லை என்று கூறியுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். எனது மனைவி தாக்கல்செய்துள்ள எதிர்வழக்குரையிலோ, அல்லது நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்கரையிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ வாதி எதற்காக பதிவு செய்ய மார்க்கமில்லை என்று கூறினார் என்றோ எப்போது பதிவுசெய்ய நான்கேட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) வாதி 2ம்வாதியான எனது தகப்பனாருக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை வாதி எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல அவர் தான் எழுதிக்கொடுத்தார். பி.வா.சா.ஆ.4 மோசடியாக உறுவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதன் மூலம் பிராது தபசில் சொத்து எவ்வித உரிமை மூலமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது மனைவி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலோ அல்லது எனது எதிர்வழக்குரையிலோ மற்றும் நிருபண வாக்குமூலத்திலோ பிராது தபசில் சொத்தில் எந்த தேதியில் வீடு கட்ட ஆரம்பிக்கப்பட்டு எந்த தேதியில் கட்டி முடிக்கப்பட்டது என்று தேதி, வருடம் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான் ஆனால் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்வதற்கு முன்பு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. வீடு எப்போது கட்டப்பட்டது எப்போது முடிக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லாமல் விடப்பட்டதற்கான காரணம் ஏதும் உண்டா என்றால் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. எனது எதிர்வழக்குரையில் பிராது தபசில சொத்தில் நான் கட்டியுள்ள வீட்டின் கதவு எண், மின் இணைப்புஎண் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது தந்தை வாதிக்குரிய நெருங்கிய உறவினர் என்பதால் உயில் ஆவணத்தை பாதுகாப்பாக வைத்திருக்க கொடுத்ததில் அதனை சாதகமாக கொண்டு மோசடியாக கிரைய ஆவணம் உற்பத்தி செய்து உரிமை கொண்டாடி வருகிறோம் என்றால் சரியல்ல. அவர்கள் உயில் ஆவணத்தை கொடுத்து நீங்கள் வீடு கட்டி துணையாக இருந்து கொள்ளுங்கள் என்று கொடுத்தார்கள். வாதிக்கு கணவரும் இல்லை,அவருடைய பெற்றோர்களும் இல்லை. வழக்கு சொத்து எனக்கு எதிரிடை அனுபவப்பாத்தியம் மூலம் பாத்தியப்பட்டதாக கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வாதிக்குப்பாத்தியப்பட்டது என்றும் அதனை காலிசுவாதீனமாக ஒப்படைக்கக்கோரி பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தபசில் சொத்தை அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் தாவாச்சொத்தை வாதியிடம் ஒப்படைக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. சொத்து சம்பந்தமாக புகார் கொடுத்து விசாரணை செய்தார்களா என்றால் புகார் கொடுக்கவில்லை. வாதியிடமிருந்து தபசில் சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக கட்சிசெய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு யாரும் ஆதரவு இல்லை என்பதால் பொய் கட்சி செய்து வருவதால் வழக்கு காலவதி தோஷத்தினால்

பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு குழந்தைகள் உள்ளதா என்றால் 3 மகன்கள் உள்ளார்கள். பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் தாவாச்சொத்திற்குரியது கிடையாது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
22.01.2026.